## தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் - 2014

---

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தினதும் அதன் தொகுதிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1976 இன் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவக சட்டம் மற்றும் 1991 இன் 28 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக் கம்பனியின் கணக்குகள் அதன் அங்கத்தவர்களால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் - தொகுதி

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் மற்றும் அதன் அதன் தொகுதிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### அபிப்பிராயம் - நிறுவகம்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 16

முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பாவனையில் காணப்படுகின்ற ரூபா 28,442,953 கிரயமான 70 சொத்து விடயங்களின் நியாயப் பெறுமதிகளைக் காட்டுவதற்காக மீள்கணிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதி ரூபா 696,186 தொகை மற்றும் 2012 யூன் 22 ஆந் திகதி மூடப்பட்ட யாழ்பாணத்தில் அமைந்துள்ள கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து ரூபா 30,124 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2010 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப் படிக்காக செலுத்தவேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கொடுப்பனவு அந்த ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்ட மாதத்தின் போது ஒரே தடவையில் கழிப்பதற்காக வருமான வரி சுற்றறிக்கை 2 இற்குரியதாகக் கொண்டு கணிப்பீடு செய்ய |

| | |
|---|---|
| | வேண்டியிருந்த போதிலும், அந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை 12 மாதங்களுக்காகப் பிரித்து தனித்தனியாக அந்தந்த மாதத்தின் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு பொதுவான வரிச் சுற்றறிக்கை 01 இன் கீழ் உழைக்கும் போதே வரிசெலுத்தல் கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 06 ஆம் பந்தி | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு எல்லையை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற விற்பனை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக நிதி, திட்டமிடல் அமைச்சரின் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது விளம்பர நடவடிக்கைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 37,500,000 தொகையினை விஞ்சி ரூபா 9,802,706 செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள் - தொகுதி

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக தொகுதியின் செயல்நடவடிக்கைகளிலிருந்து தேறிய இலாபம் (வரிக்கு முன்) ரூபா 410,101,233 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 500,954,657 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 90,853,424 தொகையான வீழ்ச்சியினைக் காணமுடிந்தது. மீளாய்வாண்டின் போது தொகுதியின் வருமானம் ரூபா 218,651,066 தொகை அதிகரித்திருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 45,767,148 இனாலும், விரிவுரை மற்றும் பயிற்சிச் செலவினம் ரூபா 192,313,498 இனாலும், பெறுமானத் தேய்வை உள்ளடங்கலாக நிறுவகத்தின் ஏனைய செலவினம் ரூபா 71,217,440 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### நிதி விளைவுகள் - நிறுவகம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல்நடவடிக்கைகளிலிருந்து தேறிய இலாபம் (வரிக்கு முன்) ரூபா 240,026,097 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 284,752,742 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 44,726,645 தொகையான வீழ்ச்சியினைக் காணமுடிந்தது. மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் ரூபா 22,456,978 இனாலும், விரிவுரை மற்றும் பயிற்சிச் செலவினம் ரூபா 12,684,563 இனாலும், நிறுவகத்தின் ஏனைய செலவினம் ரூபா 7,723,305 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் மீளாய்வாண்டின் பாடநெறி வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 18,374,088 இனால் அதாவது 2 சதவீதத்தினால் அதிகரிக்கும்போது நேர்ச் செலவினம் ரூபா 35,141,541 இனால் அதாவது 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக ஆண்டின் மொத்த இலாபத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 16,767,453 இனால் அதாவது 3.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் கண்டி, குருணாகலை, காலி மற்றும் மாத்தறை போன்ற கிளைகளில் மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியிலும் நடாத்தப்பட்ட பாடநெறி மற்றும் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு தலைமை அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டில் 142 பாடநெறிகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அது 2012 ஆம் ஆண்டு வரையில் 150 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பாடநெறிகளின் எண்ணிக்கை 143 வரை குறைவடைந்திருந்தது. இந்த பாடநெகளுக்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டின்போது 8,139 வரை அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது 6,011 வரை குறைவடைந்திருந்தது.

(ii) கண்டிக் கிளையில் 2010 ஆம் ஆண்டின் போது 781 மாணவர்களின் பங்குபற்றலுடன் 23 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது சீராக அதிகரிக்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதிவரையில் பாடநெறிகளின் எண்ணிக்கை 44 ஆகவும் மாணவர்களின் எண்ணிக்கையை 1,428 வரை அதிகரிக்கவும் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் குருணாகலைக் கிளையில் 2010 ஆம் ஆண்டில் 48 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 41 ஆகும். பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் அதன் பிரகாரம் குறைவடைந்திருந்தது.

(iii) காலிக் கிளையில் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன் அது 2013 ஆம் ஆண்டு வரையில் 38 வரை அதிகரித்து அதன் பிரகாரம் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் முடியுமாக இருந்தது. எவ்வாறாயினும் மீளாண்வாண்டின் போது மாத்தறையில் புதிய கிளை திறந்து வைக்கப்பட்டமையின் காரணமாக அதில் 08 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் காலியில் பாடநெறிகளின் எண்ணிக்கை 33 ஆக இருந்தது. காலி மற்றும் மாத்தறையில் ஒட்டு மொத்தமாக கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 12 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது.

(iv) ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் 236 பாடநெறிகளுக்காக 11,423 மாணவர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின்போது எண்ணிக்கை 269 வரை அதிகரித்திருந்த போதிலும் அதில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 9,775 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட செயலமர்வுகள் மற்றும் குறுங்கால பாடநெறிகளின் எண்ணிக்கை குறைவடைந்தமை இதற்குக் காரணமாக இருந்ததாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் உள்வந்து, பாடநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 400 ஆக இருந்தது. மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரண விடயங்கள் தொடர்பாக பரிசீலனை செய்து அதற்கு தீர்வாக புதிய பாடநெறியொன்றை அறிமுகப்படுத்தி சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்ட பாடநெறிகளை அமுல்படுத்துவதற்கும் நிறுவகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றமை

(அ) 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள காணி, மானியமாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திற்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியின் சட்டரீதியான உரித்து நிறுவகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவகத்திற்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட காலி நகரத்தில் அமைந்துள்ள காணியொன்று 2010 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 302,707,070 தொகை செலவில் கல்வி நிலைமையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் சட்டரீதியாக உரித்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிறுவகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைவற்ற சொத்துக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 9,140,508 தொகையான காகிதாதிகள் இருப்பில் ரூபா 327,324 தொகையான காகிதாதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 பெப்ரவரி 03 ஆந் திகதி வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் இணைப்பு உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு 2012 பெப்ரவரி 08 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 06 மாத காலத்திற்கு மாதாந்தம் ரூபா 30,000 தொகையொன்று செலுத்தும் அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். 2014 திசெம்பர் 12 ஆந் திகதி வரை அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டு 2 வருடமும் 11 மாதங்களும் அளவிலான காலம் சேவையாற்றி இருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியில் அவரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் தொடர்பான பதிவுகள் வைக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான தகவல்களும் பெறப்படாது நிருவகத்தினால் அந்த உத்தியோகத்தருக்கு உரிய காலப்பகுதியில் ரூபா 1,050,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தேறிய இலாபத்தின் அதிகரிப்பு முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக வருடாந்தம் 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இலாபத்தின் வீழ்ச்சி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 15.7 சதவீதமாக இருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்தபோது செயற்பாட்டு வருமானம் ரூபா 25.67 மில்லியனால் அதாவது 3

சதவீதத்தால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அபிவிருத்திச் செலவினம் 176 சதவீதத்தாலும், நன்கொடைகள் 140 சதவீதத்தாலும், மிகையூதியப்படி 83 சதவீதத்தாலும் ஆக வருடாந்த மதிப்பிடப்பட்ட செலவினத்தை விஞ்சி செலவிடப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாடநெறிகளை நடாத்துதல்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்